# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.

**Spl.C.C.No.39 of 2025**

(Spl.C.C.No.11 of 2024 - CJM, Vellore)

Prosecution Witness No.P.W.16 (L.W.18)

| | |
|---|---|
| Name | **விஜய்** |
| Father/Husband Name | Sivagurunathan |
| Calling/Occupation | Inspector of Police |
| Age | 49 |
| Address | Crime Branch CID, Vellore |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.08.2025.

(A1 and A2 Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலூர் மாவட்ட குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த செப்டம்பர் மாதம் 2013ம் வருடம் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணி செய்தபோது என்னுடைய தலைமை அலுவலகம் மற்றும் உயர் அதிகாரிகளின் உத்தரவின்படி குற்ற எண் 16/2013, பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988ன் கீழ் வழக்கு பதிவு செய்து மேற்கொள்ளப்பட்ட பொறிவைப்பு நடவடிக்கை வழக்கினை என்னுடைய புலன் விசாரணைக்கு

உத்தரவிட்டதின் அடிப்படையில் வழக்கு கோப்பினை சாட்சி திரு.ரஜினிகாந்த், காவல் ஆய்வாளரிடமிருந்து பெற்று பார்வை செய்து என்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். குற்ற எண் 16/2013 வழக்கானது புகார்தாரர் மேகநாதன் என்பவரிடம் ஆஜர் எதிரி 1 திருமதி. மனோர்மணி, ஊர் நல அலுவலர், குடியாத்தம் வட்டார வளர்ச்சி அலுவலகம் அவர்கள் புகார்தாரருக்கு தமிழக அரசால் வழங்கப்படும் கலப்பு திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் தரப்பட்ட மனுவின் மீது நடவடிக்கை மேற்கொண்டு அவரது உயர் அதிகாரி மூலம் நிதி உதவி பெற லஞ்சமாக பணம் ரூபாய் 2000/– தொகையை 12.08.2013 அன்று நேரடியாக கேட்டும், அதற்கு முன்னதாக மார்ச் மற்றும் ஜூன் மாதங்களில் புகார்தாரர் ஆஜர் எதிரி 1 அவர்களை நேரில் சந்தித்தபோது மனுவின் மீது நடவடிக்கை எடுக்க கொஞ்சம் செலவு செய்ய வேண்டியிருக்கும் என்று தெரிவித்தும் 10.08.2013 அன்று புகார்தாரரை தொலைபேசியில் அழைத்து 12.08.2013 அன்று நேரில் வரும்படி கூறியும், புகார்தாரர் எதிரி1 ஐ நேரில் சந்தித்தபோது தன்னிடம் பணம் இல்லை என்று தெரிவித்து தொடர்ந்து கெஞ்சி கேட்டுக்கொண்டதின் பெயரில் லஞ்சமாக பணம் ரூபாய் 1500/– கொடுக்க வேண்டும் என்று தொகையை குறைத்துக்கொண்டும், புகார்தாரரை புகைப்படம், பள்ளி மாற்று சான்றிதழ், ரூபாய் 20 தொகைக்கான நீதித்துறை அல்லாத முத்திரைத்தாள் பத்திரம் மற்றும் சாதி சான்றிதழ் ஆகியவற்றுடன் 13.08.2013 அன்று நேரில் வரும்படி அறிவுறுத்தியதின் பெயரில் புகார்தாரருக்கு பணம் லஞ்சமாக கொடுக்க விருப்பம் இல்லாத காரணத்தால் அதை புகாராக எழுதி 13.08.2013 அன்று காவல் துணை

கண்காணிப்பாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர் அவர்களிடம் கொடுக்க மேலொப்பம் செய்யப்பட்ட அந்த புகாரை சாட்சி திரு.ரஜினிகாந்த் காலை சுமார் 09.00 மணிக்கு பெற்று முதல் கட்ட விசாரணை முடித்து காலை சுமார் 10.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாணையின் தொடர்ச்சியாக பொறிவைப்பு நடவடிக்கைக்கு அரசு சாட்சிகளை வரவழைக்க வேண்டி துறை தலைவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அரசு சாட்சிகள் முன்னிலையில் பொறிவைப்பு நடவடிக்கை காலை 11.15 மணி முதல் 12.15 மணி வரை ஒப்படைப்பு மகசர் தயார் செய்தார்.

அதன் தொடர்ச்சியாக மதியம் சுமார் 13.45 மணி முதல் 17.45 மணி வரையில் குடியாத்தம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் வைத்து அரசு சாட்சிகள் முன்னிலையில் மற்றும் சாட்சி டீகாராமன், வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் முன்பு ரசாயன சோதனை எதிரி 2 க்கு செய்தும், பினாப்தலீன் பவுடர் தடவப்பட்ட லஞ்ச பணம் ரூபாய் 1500 ஐ கைப்பற்றியும் மேலும் வழக்கு சம்பந்தமான வருகை பதிவேடு, கலப்பு திருமண பதிவேடு ஆகியவற்றை கைப்பற்றியும், ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளை விசாரணை செய்து சாட்சிகள் முன்னிலையில் 17.45 மணிக்கு கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி ஒரு விரிவான கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்தில் ஒப்புவித்து வழக்கு சொத்து எண் 31/2013 நாள் 16.08.2013 பெறப்பட்டது. வழக்கு சொத்துக்களை சாட்சி ரஜினிகாந்த் காவல் ஆய்வாளர் தடய அறிவியல் துறையின் மூலம் இரசாயன பகுப்பாய்வு செய்ய வேண்டுகோள்

கடிதத்தை கனம் நீதிமன்றத்தின் மூலமாக வழக்கு சொத்துக்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தார். மேலும் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட இடத்தில் ஒரு விரிவான மாதிரி வரைபடம் சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்திருந்தார். இவ்வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் சாட்சிகள் திரு.மேகநாதன், திருமதி. அஸ்மா பானு, திரு.வளையாபதி, பதிவுரு எழுத்தர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மற்றும் திருமதி.சாந்தி, களப்பாணியாளர்/ கூட்டுறவு துணை பதிவாளர் வேலூர் ஆகிய இரண்டு அரசு சாட்சிகளையும், சாட்சி திரு.டீகாராமன், வட்டார வளர்ச்சி அலுவலர், சாட்சி திரு.கோமதி, மாவட்ட சமூக நல அலுவலர் வேலூர், திருமதி, அமுதா பாய், விரிவாக்க அலுவலர், சாட்சி திருமதி.மகாலட்சுமி, திருமதி.தனலட்சுமி, ஊர் நல அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் உமாதேவி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

மேலும், குடியாத்தம் ராமாலை கிராமத்தை சேர்ந்த கோவிந்தசாமி, திரு.பாபு, பெண் காவலர்கள் திருமதி.அருள்மொழி, காந்திமதி ஆகியோர்களை விசாரணை செய்தேன். மேலும், தடய அறிவியல் ஆய்வகத்தின் இயற்பியல் துறையில் வழக்கில் கைப்பற்றப்பட்ட இரசாயன கலவைகளை பகுப்பாய்வு செய்த திருமதி.கலா, உதவி இயக்குநர் அவர்களை விசாரணை செய்து பகுப்பாய்வு அறிக்கை பெற்றேன். **21.08.2013 தேதியிட்ட அந்த அறிக்கை மூன்று பக்கங்கள் அ.த.சா.ஆ.16.**

மேலும் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் திரு.ரஜினிகாந்த் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கிற்கு தொடர்புடைய மற்றும் சம்பந்தப்பட்ட கலப்பு திருமண நிதி உதவி மனுக்களான புகார்தாரரின் மனு, சாட்சி கோவிந்தசாமியின் மனு மற்றும் திரு.பாபு என்பவரின் மனு சான்றொப்பமிட்ட நகல் பெற்று அனைத்து ஆவணங்களையும் ஆய்வு செய்து என்னுடைய புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது கனம் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி இசைவு ஆணையை கேட்டு என்னுடைய தலைமை அலுவலகம் மூலமாக ஆணையர் சமூக நலத்துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பி எதிரிகள் திருமதி.மனோர்மணி மற்றும் திருமதி.கிரிஜா ஆகியோர் இசைவு ஆணையை செயல்முறை எண் 36765/Admin5–1/2013, நாள் 14.05.2014 என்ற இசைவு ஆணையை பெற்று இசைவு ஆணையை வழங்கிய சமூக நலத்துறை ஆணையர் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து ஆஜர் எதிரிகள் 1 மற்றும் 2 மீது இறுதி அறிக்கையை சட்டப்பிரிவு 7, 13(2) உடன் இணைந்த 13(1)(d) ஊழல் தடுப்பு சட்டம் 1988 உடன் இணைந்த 109 இ.த.ச.–ன் கீழ் கனம் நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்தேன்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விசாரணை அதிகாரி விசாரணை செய்து மேல் நடிவடிக்கைகளுக்காகத்தான் என்னிடம் ஆவணங்களை ஒப்படைத்தார் என்றால் சரிதான். அவர் விசாரணை முடித்து எத்தனை நாட்கள் கழித்து என்னிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தார்

என்றால் செப்டம்பர் 2013 முதல் வாரத்தில் கொடுத்தார். அவர் விசாரித்த சாட்சிகளை எல்லாம் நான் மறுவிசாரணை செய்ய சாட்சிகளுக்கு சம்மன் அனுப்பினேனா என்றால் சாட்சிகள் இருந்த இடத்தில் நான் நேரடியாக சென்று விசாரணை செய்ததால் சம்மன் எதுவும் அனுப்பவில்லை. என்னுடைய அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் Movement register ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் Movement register என்ற ஒரு பதிவேடே எங்கள் அலுவலகத்தில் இல்லை. அனைத்து அரசு அலுவலகங்களிலும் Movement register பராமரிப்பது கட்டாயம் என்றால் சரியல்ல, ஒவ்வொரு துறைக்கு அது வேறுபடும்.

சாட்சிகளை நான் எந்த தேதியில் விசாரணை செய்தேன், எங்கு விசாரணை செய்தேன் என்ற விவரங்களை நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால் எந்த தேதியில் விசாரணை செய்தேன் என்பதை அவர்களது வாக்குமூலத்திலேயே குறிப்பிட்டுள்ளேன். அனைத்து சாட்சிகளையும் நான் நேரடியாக சென்று விசாரிக்க வாய்ப்பு இல்லை என்றும் என்னுடைய அலுவலகத்திலேயே உட்காரந்துக்கொண்டு ஆவணங்களை தயார் செய்துக்கொண்டு இந்த இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, சாட்சி ரஜினிகாந்த் தவிர மற்ற அனைவரையும் நேரடியாக சென்று விசாரணை செய்தேன். முதல் தகவல் அறிக்கையில் புகார் கொடுத்த தினத்தன்றே பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரியா என்றால் சரிதான்.

கூட்டுறவு துறை மற்றும் குடிநீர் வடிகால் வாரியத்தில் வேலை செய்யும் அரசு சாட்சிகள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பே நாளை அலுவலகத்தில் ஆஜராக வேண்டும் என்று விசாரணை அதிகாரி தகவல் தெரிவித்ததாக சொல்லியுள்ளார் என்றால் அவரது வாக்குமூலத்திலோ அல்லது ஆவணங்களிலோ அவ்வாறு எதுவும் சொல்லப்படவில்லை. அந்த இரண்டு அரசு தரப்பு சாட்சிகளும் அவர்களின் குறுக்கு விசாரணையில் முதல் நாள் மாலை 05.00 மணிக்கே அவர்களுக்கு தகவல் தெரிவித்ததாக சாட்சியம் அளித்துள்ளனர் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது.

புகார் கொடுக்கும்போதே லஞ்ச பணமாக ரூபாய் 2000/– கொடுக்க கேட்டதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் ஆனால் சம்பவம் நடந்த இடத்தில் லஞ்ச பணம் ரூபாய் 1500/– என்று விசாரணை அதிகாரியால் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, புகாரில் ரூபாய் 2000 கேட்டதாகவும் அன்றைய தினமே ஆஜர் 1ம் எதிரி ரூபாய் 1500 ஆக குறைத்துக்கொண்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது, அதே தகவல்தான் முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. லஞ்ச பணம் கேட்டதாக புகார் கொடுத்தவர் ஆஜர் 1ம் எதிரி போன் மூலம் பணம் கேட்டதாக சொல்லப்பட்டுள்ள நிலையில் எந்த போன் மூலம் கைப்பேசி மூலமாகவா அல்லது அலைப்பேசி மூலமாகவா என்ற விவரத்தை விசாரணை அதிகாரி சொல்லவில்லை என்றும் என்னுடைய மேல் விசாரணையில் அது குறித்து தெரிய வந்ததா என்றால் தொலைப்பேசி என்றுதான் தெரிவித்தார்கள், எந்த தொலைப்பேசி என்று நான் விசாரித்து தெரிந்துக்கொள்ளவில்லை.

அந்த தொலைப்பேசியின் எண் மற்றும் அதன் பதிவுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், 12.08.2013 அன்று நேரடியாகவே ஆஜர் 1ம் எதிரி லஞ்சமாக பணம் கேட்டதால் 10.08.2013 அன்று நடைபெற்ற தொலைப்பேசி சம்பந்தமான தகவல்களை பெற வேண்டிய அவசியம் இல்லை. 12.08.2013 அன்று நேரடியாக 1ம் எதிரி பணம் கேட்டார் என்று நானோ விசாரணை அதிகாரியோ வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி அந்த மாதிரி புகார்தாரிடம் தொடர்பு கொண்டு பணம் எதுவும் கேட்கவில்லை என்றும் வழக்கிற்காக கேட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குடியாத்தம் Block Development Officer விசாரணையில் அவர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தஸ்தாவஜிகளை ஏதாவது கைப்பற்றினேனா என்றால் நான் கைப்பற்றவில்லை. விசாரணை அதிகாரி ஏதாவது கைப்பற்றியதாக என் விசாரணையில் தெரிய வந்ததா என்றால் அவர் கலப்பு திருமண பதிவேடு, சமூக நலத்துறை சம்பந்தமான வருகை பதிவேடு, களப்பணியாளர்கள் முகாம் சம்பந்தமான பதிவேடு ஆகியவற்றை கைப்பற்றியுள்ளார். அந்த முகாம் சம்பந்தமான பதிவேட்டில் ஆஜர் எதிரிகள் முகாமில் இருந்ததாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், பொய்யாக அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொண்ட காவல் ஆய்வாளர் திரு.ரஜினிகாந்த் அவர் தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிட்டுள்ளார்.

அரசு அலுவலக ஆவணங்கள் அவ்வாறு தவறாக இருக்க வாய்ப்பில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று மகசரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குடியாத்தம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கொடிநாள் வசூல் ஆவணங்கள் எதையும் கைப்பற்றப்பட்டதாக என் விசாரணையில் தெரிய வந்ததா என்றால் அவ்வாறான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஏறக்குறைய 2 மாதங்கள் கழித்துதான் 14.05.2014 அன்று இசைவு ஆணை பெறப்பட்டது என்றால் சரிதான், ஆனால் இரண்டு மாதங்கள் அல்ல சுமார் 10 மாதங்கள் கழித்து பெறப்பட்டது.

இசைவு ஆணை வாங்கும்போது எந்தெந்த ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது என்று தெளிவாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் 1ம் எதிரியை இரசாயன சோதனைக்கு உட்படுத்தவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் 1ம் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், எங்கள் அலுவலகத்தின் புள்ளி விவர கணக்கிற்காக பொய் வழக்கு அவர் மீது போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆஜர் 1ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

13.08.2013 அன்று புகார்தார் எங்கள் அலுவலகத்தில் கொடுத்த புகாரில் 2ம் எதிரி கிரிஜா பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவரை பார்த்ததாகக்கூட சொல்லவில்லை என்றால் சரிதான். கலப்பு திருமண மனுவை ஆய்வு செய்தது அமுதா பாய் என்பவர்தான்

என்றால் சரிதான். 2ம் எதிரி மேற்படி அலுவலகத்தில் 04.07.2013 அன்றுதான் பணியில் சேர்ந்தார் என்றால் சரிதான். 13.08.2013 அன்று கொடுத்த புகாரின் மீது முதற்கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தனி அறிக்கையாக தாக்கல் செய்யப்படவில்லை, ஆனால் முதற்கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டதாக புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. புகாரில் உயர் அதிகாரி மூலம் நிதி உதவி பெற்று தருவதாக குறிப்பிட்டு அந்த வாசகம் இல்லை.

இசைவு ஆணை பெறுவதற்காக 2ம் எதிரியின் Service register (பணி பதிவேடு) அனுப்பி வைக்கவில்லை என்றால் அனுப்பியுள்ளேன். அது குறித்து என்னுடைய அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளேன். இசைவு ஆணைக்கோரி அனுப்பப்பட்ட மனுவுடன் எந்தெந்த ஆவணங்கள் அனுப்பப்பட்டது என்ற விவரம் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரியல்ல, இசைவு ஆணையை தவிர்த்து இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள அனைத்து ஆவணங்களும் இசைவு ஆணை வழங்கியவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு எந்த ஆவணங்களும் அனுப்பி வைக்கப்படவில்லை என்றும் அந்த இசைவு ஆணை எங்கள் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டு கையொப்பம் மட்டும் பெறப்பட்டது என்றால் சரியல்ல. மாதிரி இசைவு ஆணை நான் அனுப்பி வைத்தேனா என்றால் இல்லை. மாதிரி இசைவு ஆணை அனுப்பி வைக்கப்பட்டு அதன் அடிப்படையில்தான் அ.த.சா.ஆ.1 தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

நான் எந்த சாட்சிகளையும் தனிப்பட்ட முறையில் விசாரிக்கவில்லை என்றும் அவ்வாறு விசாரித்திருந்தால் அவர்களுக்கு சம்மன் அனுப்பி விசாரணை செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரி எந்த லஞ்ச பணத்தையும் பெறவில்லை என்றால் சரியல்ல, 1ம் எதிரியின் வழிகாட்டுதலின் படியே அவர் முன்னிலையில் 2ம் எதிரி லஞ்ச பணம் என்று தெரிந்தே பெற்றார். மேற்கண்ட சங்கதி வழக்கிற்றாக நான் சொல்லும் பொய் என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், வழக்கு ஆவணங்களை சரியாக பரிசீலனை செய்யாமல் தவறான குற்றப்பத்திரிக்கை 2ம் எதிரி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2025.08.19 17:26:33 +0530